# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.............

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

Calendar
Misscellancous
Preliminary Register
Sessions

Case No. **CC 227/18**

Deposition of **PW3** Witness for

Prosecution
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. கி. செல்வராஜ்** |
| Father's Name/Husband Name | : | த/பெ. கிருஷ்ணன் |
| Village | : | வாழத்தோட்டம் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th** Day of **February 2020.**

**திரு.செல்வராஜ்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் வனசரகத்தில் வனபாதுகாவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2017ம் தேதி மொரப்பூர் வனசரகம் கீழ் மொரப்பூர் பீட் பகுதியில் வனபாதுகாவலராக பணிபுரிந்து வந்தேன். அப்பொழுது மொரப்பூர் வனச்சரக அலுவலர் தலைமையில் வனவர் மாதேஸ்வரன், எ. வேடியப்பன், பி, செல்வராஜ் வன காப்பாளர், கே.ராஜா வன காப்பாளர் ஆகியோர் அரூர் காப்புகாட்டில் ரோந்து பணியில் இருந்தபோது

20.02.,2017ம் தேதி காலை 6.30 மணிக்கு சென்றபோது பெரியபள்ளம் என்ற இடத்தில் நாய் குரைக்கும் சத்தம்கேட்டது. ஆள் நடமாட்டம் இருக்கிறதா என்று சுற்றி பார்த்தபோது ஆஜர் எதிரி அர்ஜுனன் எக்ஸ்லேட்டர் ஒயர்களை வைத்து வனவிலங்கை வேட்டையாட வேண்டி சுருக்கு கட்டிக்கொண்டிருந்தார். அவரை சுற்றி வளைத்து பிடித்து அவரை விசாரணை செய்து வனவர் மாதேஸ்வரன் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். அதன் பின்னிட்டு எதிரியை வனசரக அலுவலகத்தில் ஆஜர் செய்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தோம்.